**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.03.2026**
**OS. No. 142/2019**
**வழக்கு சாட்சி DW.1–மணியரசு, த/பெ.குருசாமி**

(பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.07 மற்றும் 08/2025 ஆனது அனுமதிக்கப்பட்டதன் பேரில், சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் கூடுதல் முதல் விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது)

**<u>பிரதிவாதி தரப்பில் கூடுதல் முதல் விசாரணை :</u>**

1. நான் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடந்த 18.09.2019 ம் தேதியில் கொடுத்த புகார் மனு, அதனுடன் இணைத்து அனுப்பிய மாதிரி வரைபடம், சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவம் கை நகல், அந்த மனுவினை நகராட்சி ஆணையர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் **பி.வா.சா.ஆ–14** ஆகும்.

2. 10.01.2020 ம் தேதியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் பெற்ற தகவல் அசல் மற்றும் 25.01.2014 ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரம் நகல் **பி.வா.சா.ஆ.15** ஆகும்.

3. மாநில தகவல் ஆணையர் வழக்கு எண்.4582/D/2020 ல் கடந்த 29.12.2020 ல் பிறப்பித்த ஆணை சார்வு நகல் **பி.வா.சா.ஆ.16** ஆகும்.

4. வாதி தரப்பில் வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்ட தண்ணீர் வரி ரசீது சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.17** ஆகும்.

5. வாதியின் மகள் தேவகி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 6) கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.18** ஆகும். (மேற்கண்ட பி.வா.சா.ஆ.17 மற்றும் பி.வா.சா.ஆ.18 ஆனது வாதி தரப்பு ஆவணம் என்று வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததால் அவர்களது ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது.)

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1) பி.வா.சா.ஆ.14 மனுவானது என்னுடைய கை நகல் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் கையொப்பம் செய்து நகல் எடுத்து வைத்ததை தான் தற்போது தாக்கல் செய்துள்ளேன். அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்து வரி சுயமதிப்பீட்டு படிவமானது 02.11.2018 ல் தேதியிட்டு கையொப்பம் செய்து நான் கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சரிபார்ப்பு அதிகாரி கையொப்பம் இல்லை என்றும், அதன் பேரில் என்ன உத்தரவானது என்பது குறித்து எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தகவல் அறியும் உரிமை

சட்டத்தின் கீழ் நான் அது குறித்து தகவல் கேட்டுள்ளேன், இதுவரை எனக்கு கிடைக்கப்பெறவில்லை. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரியுள்ளதாக சொல்வதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்கண்ட ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடமானது என்னால் வரையப்பட்டது என்றால் சரிதான். அந்த படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு என் வீடு அங்கு இல்லை என்றால் வீடு காண்பிக்கப்படவில்லை, ஆனால் வீடு அங்கு தான் அமைந்துள்ளது.

2) மேற்கண்ட மாதிரி வரைபடத்தில் வாதி செல்லம்மாள் மற்றும் அவரது மகள் தேவகியின் வீடு காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்துடன் தாக்கல் செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் வாதி செல்லம்மாள் தான் என்னிடம் கொடுத்தார். அதில் நானும் சாட்சியாக கையொப்பம் செய்தள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை படித்து பார்த்து தான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் 600 சதுரடி மற்றும் தலக்கடை, புலக்கடை மற்றும் மாமூல் தடவழி பாத்தியம் என குறிப்பிட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் பைப் லைன் அமைத்துள்ளது அவர்கள் வசம் இருந்த புலக்கடை இடத்தில் தான் என்றும், அதை ஒப்புக்கொண்டு தான் மேற்கண்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும், அதனால் தற்போது என்னால் மறுக்க இயலாது என்றால் சரியல்ல, பைப் லைன் ஆனது என் இடத்தில் செல்கிறது.

3) மேற்கண்ட தானசெட்டில்மெண்ட் பத்திரமானது 2014 ல் எழுதுவதற்கு முன்பு வாதி எப்போது வீடு கட்டினார் என்றால் அந்த பத்திரம் எழுதுவதற்கு சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக வீடு கட்டியிருப்பார். நான் சொல்வது தவறு என்றும், வாதி 28 வருடங்களுக்கு முன்பே வீடு இருந்தது என்றால் சரியல்ல, வில்லை வீடு தான் இருந்தது. பி.வா.சா.ஆ.16 ஆவணமானது நான் கோரியுள்ள தகவல் தர இயலாது என்று திருப்பப்பட்டதற்கான உத்தரவு என்றால் சரிதான், நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.15 ல் கொடுத்த தகவலுடன் பி.வா.சா.ஆ.16 ல் தரமறுத்த ஆவணத்தை சேர்த்து அவர்கள் கொடுத்தது போல் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த ஆவணத்தை வாதி தான் என்னிடம் கொடுத்தார்.

4) 2019 முதலே கழிவு நீர் செல்வதற்கு கூட விடாமல் நான் வாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றும், அதனால் வாதி என்னிடம் கொடுக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.17 ஆவணமானது ஏற்கனவே வாதி தரப்பில் தாக்கல் செய்தது என்றால் சரிதான். ஆனால் அது வீட்டு வரி ரசீதாக குறியீடு செய்யப்பட்டுள்ளது, அது செல்லம்மாள் பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீது ஆகும். தேவகி என்பவர் வாதி செல்லம்மாளின் ஒரே மகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் வாதி செல்லம்மாளும், அவரது மகள் தேவகியும் ஒரே வீட்டில் வசிப்பதற்கு தேவகி பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது என்றால் சரியல்ல, அந்த வீட்டில் வாதி செல்லம்மாள் மட்டும் தான் குடியுள்ளார்.

5) பி.வா.சா.ஆ.18 ல் குறிப்பிட்டுள்ள முகவரியானது வாதி செல்லம்மாள் குடியுள்ள வீட்டின் முகவரி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தீர்ப்பிற்காக வழக்கு நிலுவையில் உள்ளபோது வாதியின் பெயரிலுள்ள ரசீதுகளையே மீண்டும் தாக்கல் செய்து, வேண்டுமென்றே நீதிமன்றத்தின் நேரத்தை வீணத்தடித்து வருகிறேன் என்றால் சரியல்ல, 2019 ல் இருந்து வாதி தனது கழிவறை கூட பயன்படுத்த இயலாமல் பிரச்சனை செய்து, வருகிறேன் என்றும், அதனால் வாதி பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறை மற்றும் குளியலறையை காசு கொடுத்து பயன்படுத்தி வருகிறார் என்றும், நான் காலம் தாழ்த்தவேண்டும் என்றே வழக்கை இழுக்கடித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.